STC.No.116/2025 DW2.திரு.அருண்குமார்
தேதி– 08.06.2026
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் IT மெக்கானிக்கல் முடித்துள்ளேன். தற்போது நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கார் மெக்கானிக்காக இருக்கிறேன். எதிரி எனக்கு என்ன பழக்கம் என்றால் எனது மைத்துனர் ஆவார். எதிரி என் உடன் பிறந்த சகோதரியின் கணவர் ஆவார்.எதிரி தனியார் வங்கியில் வேலை பார்க்கிறார். எதிரி கூறியதன் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமான விபரத்தை எதிரி எனக்கு எப்போது கூறினார் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பின்பு கூறினார். எ.சா.ஆ.1ல் நான் எந்த வருடத்தில் பணம் செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் 2021, ஜனவரி 2022, பிப்ரவரி 2022 செலுத்தியிருந்தேன். நான் புகார்தாரரிடம் இரண்டு லட்சம் வாங்கியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்து விட்டேன் என்றும், நான் பணம் வாங்கிய விபரத்தை வைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்து விட்டேன் என்றும், இந்த வழக்கிற்க்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.இந்த காசோலைக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கு சம்பந்தமான விபரங்கள் தெரிந்த பின்பு புகார்தாரர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா, காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.பொதுவாக கடன் வாங்கிய நபர் அதனை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரிதான். எதிரியின் காசோலை மற்றும் கையெழுத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடைய கையொப்பம் என்றால் இல்லை. காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும், எதிரியின் ஆதார் கார்டில் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் உள்ளது.வக்காலத்தில் உள்ள எதிரியின் கையொப்பத்திற்கும், காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். எதிரி புகார் தாரரிடம் 5 லட்சம் பணம் வாங்கிக் கொண்டு காசோலையில் மாற்றி கையொப்பம் செய்து கொடுத்து மோசடி செய்தும்,என் மூலம் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

3. நான் பணத்தை திருப்பிக் கொடுத்த ஆவணத்தை வைத்து பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது உள்ள நம்பிக்கை என் பேரில் புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்தார் என்றும், தற்போது நானும் எதிரியும் ஒன்று சேர்ந்து புகார்தாரரை மோசடி செய்கிறோம் என்றால் சரியல்ல. உண்மையில் நான் புகார்தார்ரிடம் பணம் வாங்கி இருந்தால் அவருக்கு சட்ட அறிவிப்பு அல்லது சட்ட நடவடிக்கை எடுத்து இருப்பேன் என்றும், அவ்வாறு எடுக்காமல் பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியமானது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2022 வருடத்துடன் நான் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.08 18:07:13 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam